வாழ்க தமிழுடன்! வளர்க கலை!

# சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை

## (கலை பண்பாட்டுத்துறை)

## நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் உறுப்பினர்கள் பதிவு சேர்க்கை அறிவிப்பு

**உறுப்பினர் சேர்க்கைக்கான தகுதிகள் :**

1. 18 வயது முடிவடைந்த 60 வயது நிறைவடையாத நாட்டுப்புறக் கலைஞராக இருக்க வேண்டும். வயதுச் சான்றின் நகல் இணைக்கப்படவேண்டும்.
2. மாவட்டக் கலைமன்றம் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் வழங்கப்பட்ட கலைஞர்களுக்கான அடையாள அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்.
3. ரேசன்கார்டு நகல் இணைக்கப்படவேண்டும்.
4. மூன்று பாஸ்போர்ட் அளவு கலர் போட்டோ
5. அடையாள அட்டை இல்லாத கலைஞர்கள் கிராம நிர்வாக அலுவலர் அல்லது அந்தந்த ஊராட்சி மன்ற தலைவரிடமிருந்து தாங்கள் கலைஞர் என்பதற்காக பெறப்பட்ட சான்றிதழ் அல்லது தொடர்புடைய சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்.
6. பதிவுக்கட்டணம் ரூ. 100/-, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31ந் தேதிக்குள் புதுப்பித்தல் கட்டணம் ரூ. 10/- செலுத்துதல் வேண்டும்.

**பதிவு பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான நலத்திட்ட உதவிகள் :**

1. நாட்டுப்புற நலவாரியத்தில் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் உறுப்பினராக இருந்து 60 வயது நிரம்பிய கலைஞர் அல்லது உடல்நலக்குறைவால் இயலாத நிலையிலுள்ள 60 வயது நிரம்பாத கலைஞர் மாத ஓய்வூதியம் ரூ. 300/- பெற தகுதியுடையவராகிறார்.
2. நாட்டுப்புறக் கலைஞர்களின் இரண்டு குழந்தைகளுக்கு ஆண் (அ) பெண் திருமண நிதியுதவித் திட்டம் ரூ. 2000/- வழங்கப்படும்.
3. நாட்டுப்பறக் கலைஞர்களின் இரண்டு குழந்தைகளுக்கு 10ம் வகுப்பு படிப்பதிலிருந்து பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி மருத்துவம் படிப்பது வரை குறைந்தபட்சம் ரூ. 1000/- முதல் ரூ. 6000/- வரை கல்வி நிதியுதவி வழங்கப்படும்.
4. நாட்டுப்புறக் கலைஞர் இறந்துவிட்டால் ஈமச்சடங்கு செய்ய நேமகதாரருக்கு ரூ. 2000/- வழங்கப்படும்.
5. நாட்டுப்புறக் கலைஞர் இயற்கை மரணம் அடைந்தால்ரூ. 15,000/- நேமகதாரருக்கு வழங்கப்படும்.
6. பெண் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு மகப்பேறுக்கு ரூ. 6000/- (மாதம் ரூ. 1000/- வீதம் 6 மாதங்களுக்கு) கருச்சிதைவு ரூ. 3000/-, கருக்கலைப்பு ரூ. 3000/-)
7. விண்ணப்பம் வரப்பெறுவதின்பேரில் ஆண்டொன்றுக்கு பதிவு பெற்ற 2000 கலைஞர்களுக்கு மூக்குக்கண்ணாடி வாங்குவதற்கு ரூ. 500/- வரை நிதியுதவி
8. நலத்திட்ட உதவிகள் விண்ணப்பத்தினை ரூ. 5/-க்கு அஞ்சல்வில்லை ஒட்டி சுயவிலாசமிட்ட 10 செமீ × 25 செமீ உறையில் உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம் 820/8, டிராக்டர் வீதி, அரசு அலுவலர் அ குடியிருப்பு, திருநெல்வேலி - 7 என்ற முகவரிக்கு கடிதம் வாயிலாக அனுப்பி இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**மண்டல உதவி இயக்குநர்**
**கலை பண்பாட்டுத்துறை**
820/8, டிராக்டர் சாலை, அரசு ஊழியர் 'அ' காலனி,
திருநெல்வேலி - 627 007.

# நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

| |
|---|
| பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டவும் |

**படிவம் - 1**
(8(2)ஆம் பகுதியைக் காண்க)

## பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

மாவட்டம் : ..............................................

பதிவு எண். ..............................................

(இவ்வலுவலகத்தால் நிரப்பப்பட வேண்டும்)

1. நாட்டுப்புறக் கலைஞரின் பெயர்

2. தந்தை/கணவர் பெயர்

3. பிறந்த நாள் நாள் மாதம் ஆண்டு
(வயதை நிரூபிப்பதற்கான ஆவணத்தை இணைக்கவும்)

4. திருமணம் ஆனவரா, இல்லையா என்பது குறித்த விவரம் (திருமணமானவரா, திருமணமாகாதவரா, விதவையா, மனைவியை இழந்தவரா என்பது)

5. நிலையான முகவரி

6. தற்போதைய முகவரி

7. சுயதொழில் புரிபவரா அல்லது வேறு இடத்தில் வேலை பார்ப்பவரா என்பதைக் குறிப்பிடவும்.

8. வேறிடத்தில் வேலை பார்ப்பவராக இருந்தால், அவர் வேலை பார்க்கும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி மேலும் வேலை அளிப்பவர் / ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றை அளிக்கவும்

9. பணியின் தன்மை

10. விண்ணப்பிக்கும் நாளன்றுள்ளபடி நாட்டுப்புறக் கலைகளில் ஈடுபட்டுவரும் ஆண்டுகளின் எண்ணிக்கை

11. குடும்ப உறுப்பினர்கள் குறித்த விவரங்கள் :

| தொடர் எண் | பெயர் | வயது | உறவு | திருமணம் ஆனவரா இல்லையா என்பது குறித்த விவரம் |
|---|---|---|---|---|
| | | | | |

12. (அ) மனைவி / கணவன் பணிபுரிகின்றாரா?

(ஆ) ஆமெனில் விவரங்களைக் குறிப்பிடவும்

13. நேமகம் செய்தல் (Nomination)

| நேமகதாரரின் / நேமகதாரர்களின் பெயரும் முகவரியும் | நேமகதாரர்களுக்கு நாட்டுப்புறக் கலைஞருடன் உள்ள உறவு முறை | நேமகதாரரின் வயது | ஒவ்வொரு நேமகதாரருக்கும் வழங்கப்பட வேண்டிய பங்குத் தொகையின் சதவீதம் (%) |
|---|---|---|---|
| | | | |

நாட்டுப்புறக் கலைஞரின் கையொப்பம்
அல்லது இடது கைப் பெருவிரல் ரேகை

## நாட்டுப்புறக் கலைஞர் என்பதற்கான சான்றிதழ்

பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பத்தில் நாட்டுப்புறக் கலைஞர் அளித்துள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்த வரையிலும் நான் நம்புகின்ற வரையிலும் உண்மையானவை என்று சான்றளிக்கப்படுகிறது.

இடம் :

நாள் :

சான்றிதழ் வழங்குபவரின் / அதிகாரியின்
கையொப்பம் மற்றும் பெயர்

*அவசியமில்லாதவற்றை அடித்து விடவும்